அசல்

16.3.17 ஸ்ரீநிவாசன்

அசல்-1 தாள்-1

[illegible]

உ
சிவமயம்

திருவண்ணாமலை
16.3.17.

அன்புருவமாகிய ஐயரவர்களுக்கு அடியேன் ஸ்ரீநி
வாஸன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விஞ்ஞாபனம்.

க்ஷேமம். தங்களுடைய 15உ [illegible]
கடிதங்கிடைத்துப் பெருமகிழ்வடைந்தேன். [illegible]
[illegible]
தங்களுக்குச் சரியென்று தோன்றுகிறதா? அவரது
வேறு ஆத்மானுபவங்களைக் கொண்டு அடியார்க்கு [illegible]
சொல்வாயிருந்தால் சரியென்று தோன்றுகிறதா? அவ்வாறு
[illegible] தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கவும். பெரும்
பாலும் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடாதிருப்பது
என் உள்ளத்துக்கு வருத்தமளிக்கின்றது.

[illegible] அவர்கள்
மௌனி [illegible] வாசிக்காமலும் அதிலுள்ள
[illegible]
[illegible]. மௌனி [illegible]
[illegible]
[illegible] எழுதுகிறார்.
அது சம்பந்தப்பட்ட [illegible] தங்களுடைய
[illegible] யுகிறேன்.
[illegible]
தோன்றுகிறது.

தங்கள் [illegible]

இங்ஙனம் [illegible]

தங்கள்
ஸ்ரீநிவாசன்.

நகல்

சிவமயம்.

தஞ்சை,
16-3-17.

அன்புருவமைந்த ஐயரவர்களுக்கு அடியேன் ஸ்ரீநிவாஸன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விஞ்ஞாபனம்.

க்ஷேமம். தங்களுடைய 15-2. யுள்ள கடிதங் கிடைத்துப் பெருமகிழ்வடைந்தேன். சிலப்பதிகாரக் கால வரையறையைப் பற்றி நான் எழுதியிருப்பது தங்களுக்குச் சரியென்று தோன்றுகிறதா அல்லது வேறு ஆதாரங்களைக் கொண்டு அடியார்க்குநல்லார் சொல்லியிருப்பரென்று தோன்றுகிறதா? அவ்விஷயத்தில் தங்களபிப்ராயம் தெரியவில்லை. பெரும்பாலுந் தங்களபிப்ராயத்தை வெளியிடாதிருப்பது என் ஊக்கத்தை மிகவும் குறைக்கின்றது.

ஸ்வாமிக் கண்ணுப் பிள்ளையவர்கள் மணிமேகலையைத் தான் வாசிக்காமலும் அதிற் கண்ட கதையென்னதெனத் தெரிந்து கொள்ளாமலும் எழுதியிருக்கிறாரென்று காணப்படுகிறது. மணிமேகலையால் சிலவிடங்களைக் காட்டியவைகளால் சங்கம் ௨-ம். நூற்றாண்டிலிருந்ததாகத் தெரிகிறதென்று எழுதுகிறார். அது சம்பந்தப்பட்ட மட்டிலெழுதித் தங்களுடைய பார்வைக்குச் சுமார் ஒருவாரத்தில் அனுப்புகிறேன். பார்த்து விட்டுத் திருப்பியனுப்பிவிடலாமென்று தோன்றுகிறது.

தங்களன்பையும் ஆசீர்வாதத்தையும் எப்பொழுதும் பிரார்த்திக்கும்.

தங்கள்.
ஸ்ரீநிவாஸன்

நகல்

11

ஸ்ரீநிவாசன். 16/3/17.

74

தி. ஸ்ரீ. vol III.
p - 199, 200

32